3 Rajadurai

# ஆத்ம ஜோதி.



அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை.

சோதி 1. சர்வதாரி௵ தைமீ சுடர் 3.

# ஆத்ம ஜோதி.

## பொருளடக்கம்.

---


| | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1 | வள்ளலார் துதி | 53 |
| 2 | ஜோதி தோத்திரம் | 54 |
| 3 | சமரச சுத்தசன்மார்க்கம் | 55 |
| 4 | அருட்பிரகாச வள்ளலார்..........போதனை | 61 |
| 5 | ஜாதிமதப் போர் ஒழிக | 62 |
| 6 | வேதாந்தமும் மாயையும் | 63 |
| 7 | பக்தர்களைத் தூற்றும் பதர்கள் | 65 |
| 8 | அருட்பார்வை | 67 |
| 9 | சுத்தானந்தர் கடிதம் | 69 |
| 10 | ஆத்மஜோதி | 70 |
| 11 | ஆத்மசக்தி பொங்க வேண்டும் | 73 |
| 12 | உனக்கு வேண்டுவது யாது? | 74 |
| 13 | நெஞ்சமே கேள் | 77 |
| 14 | பிரார்த்தனையின் மகத்துவம் | 78 |
| 15 | பாதம் பணிவோமடி | 79 |
| 16 | வெள்ளியெழுச்சி | 80 |
| 17 | ஸ்ரீரமண தேசிகன் றுணை | 81 |
| 18 | சமரச சன்மார்க்க வாசிகசாலை | 82 |
| 19 | செய்தித்திரட்டு | 84 |


---


**சந்தா விபரம்:**

ஒருவருடம் ரூ. 3-00, ஆயுள் சந்தா ரூ. 75-00,

தனிப்பிரதி சதம் 30.

ஆத்மஜோதி சம்பந்தமான சகல விஷயங்களுக்கும் பின்வரும் விலாசத்திற்குக் கடிதமெழுதுக

**நா. முத்தையா,**

79/6, டொலஸ்பாகே ரோட், நாவலப்பிட்டி, (இலங்கை)

---

கௌரவ ஆசிரியர் திரு. க. இராமச்சந்திரன்,

பதிப்பாசிரியர் நா முத்தையா, 79/6, டொலஸ்பாகேரோட், நாவலப்பிட்டி

நாவலப்பிட்டி, 'சரவண' அச்சியந்திரசாலையில் பதிப்பித்தது.

14-1-49 2000-ம் பிரதிகள்.



ஓம்

# ஆத்ம ஜோதி.

அருட்சபை நடம்புரி அருட்பெருஞ் ஜோதி
தெருட்பெருஞ் சீர்சொலத் திகழ்வ சித்தியே.

—இராமலிங்கசுவாமிகள்

| ஜோதி 1 | சர்வதாரிஹு தைமீ. | சுடர் 3 |
|---|---|---|


## வள்ளலார் துதி.

---

உலகந் தழைக்க வந்துதித்த
வுருவே வருக வோதாதே
உற்ற கலைக ளனைத்தினையு
முணர்ந்தோய் வருக வொன்றிர
ண்டற்

றிலகும் பரமா னந்தசுக
இயல்பே வருக விம்பர்தமை
இறவாக் கதியி லேற்றுகின்ற
விறையே வருக வென்போல்வார்

கலகந் தவிர்த்துக் கதியளிக்குங்
கண்ணே வருக கண்ணிறைந்த
களிப்பே களிப்பி லூறுகின்ற
கனியே வருக கலைமதிதோய்

வலகஞ் செறிந்த வடற்பதியின்
வாழ்வே வருக இராமலிங்க
வள்ள லெனுமோர் மாணிக்க
மணியே வருக வருகவே

—ஓர் பக்தன்

# ஜோதி தோத்திரம்.

—:—:—

சங்கராபரணம்] [அடதாளம்

பல்லவி

சிவசிவ சிவசிவ ஜோதி—சிவ
சிவசிவ சிவசிவ சிவசிவ ஜோதி
சிவசிவ சிவசிவ ஜோதி.

சரணங்கள்

தன்னிக ரில்லதோர் ஜோதி—சுத்த
சன்மார்க்க சங்கந் தழுவிய ஜோதி
என்னுள் நிறைந்த மெய் ஜோதி—என்னை
ஈன்றைந்தொழில் செய்யென் றேவிய ஜோதி
—சிவசிவ

ஏகாந்த மாகிய ஜோதி—என்னுள்
என்றும் பிரியாதிருக்கின்ற ஜோதி
சாகா வரந்தந்த ஜோதி—என்னைத்
தானாக்கிக் கொண்டதோர் சத்தியஜோதி.—சிவசிவ

சுத்த சிவமய ஜோதி—என்னை
ஜோதி மணிமுடி சூட்டிய ஜோதி
சத்திய மாம்பெருஞ் ஜோதி—நானே
தானாகி யாளத் தயவுசெய் ஜோதி. —சிவசிவ

—இராமலிங்கசுவாமிகள்.

# சமரச சுத்த சன்மார்க்கம்.

இன்று உலகின் எத்திசையை நோக்கினாலும் அங்கே அரசியற் கிளர்ச்சிகளையும், சமூகக்கொந்தளிப்புகளையும், பொருளாதாரப்பிரச்சனைகளையும் காண்கின்றோம். இந்த மூன்று துறைகளிலும், சம உரிமை, சமத்துவம், பொதுவுடைமை என்ற பேச்சுக்களையே கேட்கின்றோம். காலதேவிவேண்டிநிற்கும் ஓர் பெரிய மாற்றத்தின் அறிகுறிகளே இவையெல்லாம். தன்னல மென்ற அடிப்படையில் கட்டப்பட்டிருந்த தனியுடைமைக் கொள்கையைப் போக்கிப் பொதுவுடைமை உணர்ச்சியைத் தூண்டிவிட்டதாக ருஷ்யா பெருமை பாராட்டுகின்றது. தன் புதுக்கொள்கை உலகெங்கும் பரவவேண்டுமென்றும் அரும்பாடு படுகிறது. இந்தப்புரட்சியானது அறப்புரட்சியாயில்லாது மூர்க்கப்புரட்சியா யிருப்பதினாலேயே சமாதானக் குறைவு எங்கும் இன்று பரந்துள்ளது. தன்னையடக்கி யாளப்பழகுமுன் தரணி முழுவதையும் ஆளவேண்டும், தன்னை யறியமுன் பின்னையெல்லாவற்றையும் அறிய வேண்டும், தன்னுள் அமைதி காணுமுன் புறத்தே அமைதியை நிறுவவேண்டும் என்று மார்பு தட்டி நிற்கும் ஆணவச்செருக்குற்ற அரசியல் தலைவர்களே நாம் காணும் மூர்க்கப் புரட்சிக்கு முக்கிய காரணராவர். மூர்க்கம் மூர்க்கத்தையே வளர்த்து இறுதியில் போரில் முடியுமென்பதை இரண்டு அகோர உலகயுத்தங்கள்நடந்தும் அவர்கள் இன்னும் உணரவில்லை.

உலகில் உண்மையான, நிரந்தரமான, சமத்துவமும், சகோதரத்துவமும், சமாதானமும் நிலவவேண்டுமெனில், உலகில் இன்றுள்ள சமயங்கள் மூலம் ஆன்மநேய ஒருமை உணர்ச்சி பரவவேண்டும். நாம் இங்கு கருதுவது தெய்வீகக்கலப்புள்ள சமுதாய வாழ்க்கையையே. இதற்கு முதல் வேண்டப்படுவது எந்த ஒரு சமயத்தையும் 'பொய்' எனத்தள்ளாத மனப்பான்மை. உலகில் யாம் இன்று காணும் முக்கிய மதங்களெல்லாம் அன்பையே போதிக்கின்றன, ஒழுக்கத்தையே வற்புறுத்துகின்றன, மெய்ப்பொருளாகிய கடவுளொன்றையே போற்றுகின்றன. எனவே, மெய்ச்சமயம், பொய்ச்சமயம் என்ற பிரிவு வருவதற்கு இடமேயில்லை. ஒரு மதத்தின் பேரால், அந்த மதபோதனைகளையே உண்மையில் அனுட்டிக்காத மூடர்கள் சிலர் செய்யும் தீயசெயல்களுக்காக, அந்த மதத்

தையே வெறுத்தல் முறையாகாது. மதம் வேறு மதவெறி வேறு கும். இறைவனை அனுபூதியில் பெறும் இடம் எல்லா மதங்களையுங் கடந்த, எல்லாமதத்தினர்க்கும் பொதுவான ஓர் இடமாகும். அன்பு, சமரசம், சீவகாருண்யம் மூன்றையும் சமய வாழ்க்கையில் பேணிவாழ்வோர் எல்லாரும், எந்தச்சமயத்தைச் சேர்ந்தவராயிருப்பினும், இந்தப்பொதுவிடத்தில் சந்திக்கவே செய்வர். அங்கே தான் சத்மார்க்கம் ஆரம்பிக்கின்றது. சத்மார்க்கமும் சன்மார்க்கமும் ஒன்றே. சத்-கடவுள் (உண்மைப்பொருள்) மார்க்கம்--அவரை அடையும் நெறி. சமரசம் இல்லாவிடத்தில் இதுதோன்றவே மாட்டாது. ஆகையால் சமரசத்தின் மேன்மையைப்பற்றிச் சிறிது ஆராய்வோம்.

ஒவ்வொரு உயிரும் தெய்வத்தன்மை வாய்ந்ததென்பதே சமரசத்தின் அடிப்படையான கருத்தாகும். ஒருமனிதனுக்கும் மற்றொரு மனிதனுக்குமுள்ள வித்தியாசத்திற்குக் காரணம் அவர்களது தெய்வத்தன்மையாம் பொதுச் சூரிய ஒளியைக் காணவொட்டாது மறைத்து நிற்கும் அறியாமையாம் மேகங்களின் அடர்த்தி வேறுபாடேயாம். இந்த அறியாமையைப் போக்கி மனிதனிடத்து அடங்கியுள்ள தெய்வத்தன்மையை வெளிப்படச்செய்தலே சமயத்தின் தொண்டாகும். ஒவ்வொரு மனிதனும் ஆன்மாவாதலின் பிறரை ஆன்மாக்களாகக் கருதி, அதற்கேற்றவாறு பிறரிடம் நடந்துகொள்ளப் பழகுதல் ஒவ்வொருவர்க்குங் கடமையாகும். ஆன்மாவிடத்து ஆண் பெண் வித்தியாசமில்லாதிருப்பதுபோலவே, சாதிமத வித்தியாசமோ, வேறு எவ்வித குறைபாடோ இருக்க முடியாது. உலகிலுள்ள எல்லாச்சமய வேதங்கட்கும் சம்மதமான உண்மை இது. ஆகையால், புறவாழ்வில் காணப்படும் வேற்றுமைகளையெல்லாம் ஒழித்தற்கும், சமரசக்காட்சியைப் பெறுதற்குரிய முறைகளைப் போதிப்பதற்கும் ஒவ்வொருமதமும் முயலவேண்டும். ஒருமதத்தின் பெருமை அது போதிக்கும் உண்மைகளை அனுட்டானத்தில் விளக்கும் மெய்யடியார்களைப் பொறுத்திருக்கிறதேயன்றி வெறும் சனத்தொகையிலில்ல.

இந்துமதத்தின் சிறப்புக்குணங்களுள் முக்கியமானது சமரசம். 'ஏகம் ஸத் விப்ரா பஹுதாவதந்தி' என்கிறது வடமொழி வேதம். அதாவது, உள்ளது ஒன்று, அதனை மெய்யுணர்ந்தவர்



பலவாறாகப் பேசுவர். 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்கிறது தென்மொழி வேதம். 'யாதும் ஊரே யாவருங்கேளிர்' என்பது பழந்தமிழ்வாக்கு. வேதஉபநிடத சாரங்களில் தோய்ந்த உள்ளங்களிலிருந்துதித்த திருவாசகம், தேவாரம், திருவாய்மொழிகள் எல்லாவற்றிலும் இக்கொள்கையைப் பரக்கக்காணலாம். 'விரிவிலா அறிவினர்கள் வேறொரு சமயஞ்செய்து, எரிவினாற் சொன்னாரேனும் எம்பிராற்கேற்றதாகும்' என்கிறார் அப்பர். 'அவரவர் தமதமது அறிவு அறிவகைவகை, அவரவர் இறையவர் என அடி அடைவர்கள், அவரவர் இறையவர் குறைவிலர், இறையவர், அவரவர் விதிவழி அடைய நின்றனரே' என்கிறார் நம்மாழ்வார். பின்னாளில் சைவ-வைஷ்ணவச் சண்டையைக் கண்ணுற்ற கவிச்சக்ரவர்த்தியாம் கம்பர் 'அரனதிகன் உலகளந்த அரியதிகன் என்றுரைக்கும் அறிவிலோர்க்குப், பரகதி சென்றடைவரிய பரிசேபோல்' என்று சாட்டை கொடுத்துள்ளார். 'எங்கள் தெய்வம் உங்கள் தெய்வம் என்று பேதமுள்ளதோ? உங்கள் பேதமன்றி யந்த உண்மை பேதமில்லையே' என்றனர் சிவவாக்கியர். இவ்விதம் இந்துமத சாஸ்திரங்கள், தோத்திரங்கள் எல்லாம் சமரசக் கொள்கையைப் பெரிதும் விளக்கியபோதிலும் நடைமுறையில் அது அதிகம் பரவவில்லை. பதினெட்டாம் நூற்றாண்டின்மேல்தான் அது வாழ்வில் உரம்பெற்றதாகும்.

### மஹரிஷி தாயுமானார்.

நவீன பௌதிக சாஸ்திர வளர்ச்சியை ஆராய்ச்சிசெய்வோர் இத்தாலிய விஞ்ஞானியான கலிலியோவை அதின் தந்தையென்பர். இந்த முறையில், சமயவாழ்வில் சமரசக்கொள்கையின் மலர்ச்சியை ஆராயும்போது, அதேவித தந்தைப்பட்டம் மஹரிஷிதாயுமானாருக்கே உரியதாகும். வேதாந்த-சித்தாந்தமான இரு பெருங் கொள்கைகளைப் பிணைப்பதற்குச் சமரசப்பாலங் கட்டியவர் அவரே. அவரது சின்மயானந்த குருவணக்கப்பதிகத்தில் 'சைவமுதலாம் அளவில் சமயமும் வகுத்துமேற் சமயங்கடந்த மோனசமரசம்வகுத்தநீ' எனக் கூறும் பாட்டில், கடவுட்காட்சியையும், அதைப்பெறுவதற்கு சமரசம் எவ்வளவு அத்தியாவசியகமென்பதையும் ஒப்பற்ற முறையில் விளக்கியுள்ளர். அன்பொருமை, உண்மையொருமை, சமய ஒருமை மூன்றிலும் சமரசத்தை முதல் முதலாக உபதே

சித்தவர் தாயுமானாரே. இக்காரணம்பற்றியே அவரது பாடல்கள் இன்று தமிழ் உபநிடதமெனப் புகழப்படுகின்றன. 'தோத்திரத்திற்குத் திருவாசகம்; சாஸ்திரத்திற்குத் திருமந்திரம்' என்பது ஓர் தமிழ் வாக்கு. அதனோடு, 'தோத்திரம் சாஸ்திரம் இரண்டிற்கும் தாயுமானார் பாடல்' என்பதைச் சேர்க்க விரும்புகின்றோம். வேதாந்த-சித்தாந்தச் சண்டைக்குச் சமாதானங் கூறியதோடு நின்றுவிடாது, உலகிலுள்ள சகல சமயங்களுக்கிடையே உள்ள ஒற்றுமையையும் கீழ்க்கண்ட பாடலில் அவர் அழகாய்ப் புகட்டியுள்ளார்:—

"வேறுபடுஞ் சமயமெல்லாம் புகுந்து பார்க்கின்
விளங்குபரம்பொருளே நின்விளையாட்டல்லால்
மாறுபடுங் கருத்தில்லை முடிவில்மோன
வாரிதியினதித்திரள்போல் வயங்கிற்றம்மா."

தாயுமானார் பேரின்ப நிஷ்டைகூடிப் பரமாகாசத்திற்கலந்தது 1742-ம் ௵ தை௴ பூரணையன்று.

## இராமலிங்கசுவாமிகள்

பௌதிக சாஸ்திர உலகில் கலிலியோவைத் தொடர்ந்து நியூற்றன் தோன்றித் தொண்டாற்றியதுபோல், தாயுமானாரின் உபதேசங்களை அடிப்படையாகக்கொண்டு, சென்ற நூற்றாண்டில் சமரச நெறியை ஓங்கச்செய்யத் தோன்றியவர்கள் மூவர்: தென்னாட்டில் இராமலிங்கர்; வடநாட்டில் இராமகிருஷ்ணரும் விவேகானந்தரும். இம்மூவரின் வாழ்க்கையும் உபதேசங்களும் முறையே தாயுமானார் விளக்கிய அன்பொருமை, சமய ஒருமை, உண்மையொருமை மூன்றினுக்கும் பரந்த விரிவுரைகள் போலவும் மொழிபெயர்ப்புகள் போலவும் அமைந்துள்ளன. சன்மார்க்கத்தின் உயிர்நிலை ஜீவகாருண்ய ஒழுக்கமென்றும், ஜீவகாருண்ய ஒழுக்கத்தின் முடிவு தயாவடிவுற்று இறைவனருளைப் பெறுதலென்றும் உபதேசித்தனர் இராமலிங்கர். இதின்விரிவான விளக்கத்தைஅவரின்வாக்கிலேயே பிறிதோரிடத்தில் தருகின்றோம். சமயத்துறையுள்மாத்திரம் ஈடுபட்டிருந்த வள்ளலாரின்உன்னத லட்சியத்தை அரசியல் வாழ்க்கையிலும் சமுதாய வாழ்க்கையிலும் புகுத்தி, ஒழுக்கத்திற்கும் சர்வசமரச வாழ்க்கைக்கும் உயிராயிருப்பதுஅஹிம்சையேஎன வாழ்க்கையாலும் வாக்காலும் விளக்கிய தனிப்பெருமை மகாத்மா



காந்தியைச்சேர்ந்ததாகும். மகாத்மா இராமலிங்கர் ஒளியுடன் கலந்தது தைமாசத்தில் புனர்பூச நட்சத்திரம் பொருந்திய புனிதவேளையிலாகும். காந்தியடிகளின் ஆத்மக்குண்டு வெடித்து இப்புவனம் முழுவதையுமே அதிரச்செய்ததும் இத் தைமாசத்திலேயாம்.

சன்மார்க்க சங்கத்தீர் சிற்றடியேன் உமது
தாள்வணங்கிச் சாற்றுகின்றேன் தயவினொடுங்கேட்பீர்
என்மார்க்கத்தெனை நுமக்கு ளொருவனெனக்கொள்வீர்
எல்லாஞ்செய்வல்லநம திறைவனையே தொழுவீர்
புன்மார்க்கத்தவர்போலே வேறுசிலபுகன்றே
புந்திமயக்கடையாதீர் பூரணமெய்ச் சுகமாய்த்
தன்மார்க்கமாய் விளங்குஞ் சுத்தசிவமொன்றே
தன்னாணை என்னாணை சார்ந்தறிமினீண்டே.

—இராமலிங்கர்.

## சுவாமி விவேகானந்தர்

தமது குருநாதர் அநுபூதிமூலம் விளக்கிய சமய ஒருமையை உண்மை ஒருமையோடு பிணைத்து உலகுக்குச் சர்வமத சமரச ஞானத்தை அள்ளி வாரியிறைத்த வள்ளலாம் விவேகானந்தர் அவதரித்தது மகர சங்கிராந்தி நாளாகும். இந்தமுறை அவரது ஜயந்தி விழா இம்மாசம் 8-ந் தேதி (21-1-49) பொருந்தியுள்ளது. புண்ணிய க்ஷேத்திரமான காசியில் எழுந்தருளியிருக்கும் விஸ்வநாதப் பெருமானை நினைந்து நோன்புநோற்ற புவனேஸ்வரியம்மையார் கர்ப்பத்தில் உதித்த நரேந்திரரே ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் உறவால் விவேகானந்தராகப்பரிணமித்தனர். இவர்உடல் கொண்டுலாவியது முப்பத்தொன்பதரைஆண்டுகளேயாம். அதில்ஒன்பதுஆண்டுகளையே பொதுவாழ்வில் கழித்தனர். இந்தச் சிறு காலஎல்லைக்குள் அவர் சாதித்துள்ள கருமங்கள் அளப்பில. பிறர் ஒரு நூற்றாண்டில் செய்து முடிக்கஇயலாத தொண்டுகளை ஒன்பது ஆண்டுகளுள் செய்து முடித்து 1902ம் வருஷத்தில் வீரன்போல் மறைந்தனர்.

இந்தியர் காட்டுமிராண்டிகள், கல்லையும் செம்பையும் மரத்தையும் வணங்கும் அநாகரிகசாதியினர் என்ற எண்ணத்துடன், அவர்களைத்திருத்துவதற்காய்ப்பாதிரிமார்களை அனுப்பிக்கொண்டிருந்த அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் இந்துசமயவெற்றிக்கொடி பறக்கச்செய்து, பாரதநாட்டிற்கு என்றும் அழியாப்புகழைத் தேடி

வைத்தவர் இந்த வேதாந்த கேசரியே. 1893ம் ஆண்டில் சிக்காக் கோவில் நடந்த சர்வமத மகாநாட்டில் பேசிய போது "அழிவிலா ஆனந்தத்தில் பிறந்த குழந்தைகளே! நீங்கள் பாவத்திலும் துயரத்திலும் பிறவியெடுத்த பலவீனப்பிண்டங்களல்லர்!" என்று அவர் கர்ஜித்ததும் சபையிலிருந்தோர் சகலரதும் திகைப்புடன் புத்துணர்ச்சி பெற்ற செய்தி உலகறிந்தவிஷயம். பின்னர் அவர் "சமயம் என்பது சித்தாந்தங்களிலும் கொள்கைகளிலும் இருப்பதன்று ஆத்மனை அநுபூதியில் உணர்தலிலேதான் உள்ளது" எனவிளக்கி, 'ஆத்மா ஒன்றே (மெய்ப்பொருள் ஏகம்) என்ற உண்மை நல்லொழுக்கத்திற்கு அழிவற்ற பிரமாணத்தை அளித்து, உண்மையான சகோதரத்துவத்திற்கும் அன்புக்கும் இடமளிக்கின்றது,' எனக்கூறி சமரசக்கொடியை ஏற்றினார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் மேற்கூறியவாறு உதித்த சமரசநெறியானது, இராமகிருஷ்ணரது திருப்பேரால் நிறுவப்பெற்ற சங்கங்களின் மூலமாகவும், ஸ்ரீ ரமணாச்சிரமம், ஆனந்தாச்சிரமம் அரவிந்தாச்சிரமம், ரிஷிகேசம் ஆனந்த-குடீர், முதலாயதவ நிலையங்கள் மூலமாகவும், உலகின் நாலாபக்கங்களிலும் இன்று பரவியுள்ளது. ஐரோப்பாவில் வளர்ந்து வரும் பொதுவுடைமையை அருளுடைமையாக மாற்றும் ஆத்மீகசக்தி பரதகண்டத்திலேயே உள்ளது. ஆன்மநேய ஒருமைப்பாட்டில் வரும் சர்வ மனித சமரசம் ஒன்றே உலகில் சாந்தியையும் சமாதானத்தையும் நிறுவக்கூடியது, ஆதலின், உலகிலுள்ள பத்து முக்கிய சமயங்களும் சன்மார்க்க நிலையிற் சந்திக்கவேண்டும். இத்தொண்டில் சுதந்திரம் பெற்ற இந்தியா வழிகாட்டுமென்பதில் ஐயமில்லை.

—ஆசிரியர்.

---

ஒன்றாகக் காண்பதே காட்சி புலனைந்தும்
வென்றான் தன் வீரமே வீரம்—என்றுந்தான்
சாவாமை கற்பதே கல்வி தனைப்பிறர்
ஏவாமல் உண்பதே ஊண்

—ஔவையார்

# அருட்பிரகாச வள்ளலார் அருளிய சன்மார்க்க போதனைகள்.

—:—:—:—

[கல்நெஞ்சையும் கரைந்துருகச்செய்யும் இராமலிங்கசுவாமிகளின் பாடல்களைத் தமிழர் நன்கறிவர். ஆனால் அவரின் வசன நூல்களை அறிந்தவர் மிகச்சிலரே. ஆகையால், அவற்றிலிருந்து சில அமிர்த வசனங்களைக் கீழே தருகின்றோம்.

—ஆசிரியர்]

## பரம்பொருளும் அருளும்.

பிரமா, விஷ்ணு, உருத்திராதிகளுடைய பதங்களும், அந்தக் கர்த்தாக்களும் அவர்களால் சிருட்டி, திதி, சங்காரஞ்செய்யப்பட்டுவருகிற தேகாதி பிரபஞ்சங்களும் அநித்தியம். ஆதலில், நித்தியமாகியும் என்றும் ஒருதன்மை உள்ளதாகியும், ச்ச்சிதானந்த வடிவமாகியும் அகண்டபரிபூரண வஸ்துவாகியும் விளங்கிய சிவமே நமக்குப் பொருள். அன்றியும், தாய், தந்தை, குரு, தெய்வம், சிநேகர், உறவினர் முதலியவர்களும் மேற்குறித்த சிவத்தின் திருவருளேயல்லது வேறில்லை. நாம் பல சனனங்களையுந் தப்பி மேலான இந்த மனிதப்பிறவி யெடுத்தது சிவத்தின் திருவருளைப்பெறுவதற்கே. எவ்வகைப்பிரயாசத்தினாலாவது அந்த அருளை அடையவேண்டும். அந்த அருள் எவ்வகையால் வருமென்றால்—எல்லா உயிர்களிடத்திலும் தயவும், பிரபஞ்சத்தில் வெறுப்பும், சிவத்தினிடத்தில் அன்பும் மாறாது நம்மிடத்திருந்தால் அவ்வருள் நம்மையடையும். நாமும் அதையடைந்து எதிரற்ற சுகத்திலிருப்போம்.

## ஆறு அந்தங்களையுங் கடந்த சத்தியமார்க்கம்.

மனிதப்பிறவி ஆன்மலாபம் பெறுவதற்காகவே கொடுக்கப்பட்டிருக்கிறது; ஆன்மலாபம் கடவுள் தயவின்றிக் கைகூடாது; கடவுள் தயவு ஒருவன் தயாவடிவடைந்தாலன்றி எய்தாது; தயாவடிவம் ஜீவதயவு இன்றி வராது; ஜீவதயவு எல்லார்க்கும் ஓர் அளவு இயல்பாக இருக்கிறதென்றாலும், சாதி சமய பேதங்கள் அறவே ஒழியாமலும், ஆன்ம நேய ஒருமைப்பாட்டுரிமை நிறைந்து விளங்காமலும், அது ஆழ்ந்து விரிவடைந்து உரங்கொள்ளாது;

பேத ஒழிவும் ஆன்ம நேய ஒருமைப்பாட்டுரிமை விளங்குதலும் சத்விசாரமின்றிக் கூடாது; சத்விசாரம் கடவுளின் இயற்கை உண்மை விளங்கினாலன்றி உண்டாகாது. இதுவே சன்மார்க்க விளக்கமாகும். அதாவது, கடவுளின் இயற்கை உண்மை விளங்கி, சத்விசாரம் செய்து, பேதங்களை ஒழித்து, ஆன்ம நேய ஒருமைப்பாட்டினை அடைந்து, ஜீவகாருண்யம் ஸ்திரப்பட்டு, அதை இடைவிடாது நடாத்தி, தயாவடிவடைந்து, கடவுள் தயவைப்பெற்று ஆன்மலாபம் அடையப்பெறுவதென்பதே சன்மார்க்க நெறியாகும். இது வைதிக நெறியின் பாற்பட்ட ஆறு அந்தங்களையும் சமரசப்படுத்துவதால், ஷடாந்த சமரச சன்மார்க்கமென்றும், அந்த ஆறு அந்தங்களையுங் கடந்து நிற்பதால், ஷடாந்தசமரசசுத்தசன்மார்க்கமென்றும், சத்தென்னும் முடிவான பொருளின் அல்லது கடவுளின் உண்மையைத் தெரிவிக்கின்றதாதலால் சன்மார்க்கமென்றும், இம்மார்க்கம் அழைக்கப்படுகின்றது. இது எல்லாச்சமயங்களுக்கும் எல்லாமார்க்கங்களுக்கும் உண்மைப் பொது நெறியாகி எக்காலத்தும் விளங்குவதால் சமரச சுத்த சன்மார்க்கம் என்றும் சத்திய மார்க்கம் என்றும் பெயர் பெறும்.

---

### ஜாதிமதப் போர் ஒழிக

தர்க்கங் கடந்தபரம் பொருளின் மீது
சாதிமதச் சாயங்கள் பூச வேண்டாம்
சொர்க்க நாடெல்லோர்க்கும் சொந்த மாகும்
சுத்தசன் மார்க்கமே அதற்கு வேண்டும்
அர்த்தமில் லாதசொற் போர் தொடுத்து
ஆயுள் வீணாகக் கழிந்தி டாமல்
நிர்க்குண நிராலம்ப நிறைவை அண்டி
நீங்காத பேரின்பம் எய்தி வாழ்வாம்.

"சுதந்திர ஜீவன்"

# வேதாந்தமும் மாயையும்.

—:—:—:—

(ராஜாஜி.)

உலகம் சர்வேசுரனுடைய மாயையென்று வேதாந்திகள் சொல்லக் கேட்டிருக்கிறோம். இதன் பொருள் உலகம் பொய் என்பதல்ல. உலகம் சரியான உண்மை, பொய்யல்ல. மாயையைப்பற்றியும் ஆத்மாவைப்பற்றியும், பரம்பொருளைப்பற்றியும் உபதேசம் செய்த பெரியோர்கள் அனைவரும் உலகம் உண்மை என்றே தங்கள் வாழ்க்கையை நடத்தி வந்திருக்கிறார்கள். உபதேசத்திற்கு மாறாக நடக்கும் வேஷதாரிகளைப்பற்றிச் சொல்லவில்லை; பூரண மெய்வாழ்க்கை நடத்திய ஞானிகளின் வாழ்க்கையை ஆராய்ந்து பார்த்தாலே, உலகமும் உலகவாழ்க்கையும் வினைப்பயனும் உண்மை என்றே அவர்கள் எண்ணினார்கள் என்பது சந்தேகமற உறுதியாகிறது. இப்படியிருந்தும் அவர்களது கொள்கையானது எல்லாம் மாயை, எல்லாம் ஈசுவரனுடைய உருவமே என்றால், இதற்குப் பொருள் வேறாக இருக்கவேண்டும்.

ஈசனே சகலமும் என்றால் அனைத்தின் உயிரும் அவனே என்று பொருள். உடலுக்கு ஆத்மா எவ்வாறோ அவ்வாறு எல்லாப்பொருள்களுள்ளும் எல்லா உயிர்களுள்ளும் ஈசன் ஊடுருவி அந்தர்யாமியாக நிற்கிறான். நான் போனேன், நான் வந்தேன், நான் செய்தேன், என்றால், அது கேவலம் உடலின் செயலானபோதிலும், உடலுக்குள் எல்லாவற்றையும் நடத்தும் ஆத்மாவின் கருமமேயாகும். அதுபோலவே ஆத்மாவுக்கு ஆத்மா ஈசன். ஆத்மாவின்செயல் ஈசனுடைய செயல். ஆகையால் நம்முடைய செயல் ஈசன் செயல். ஈசனும் உண்மை, ஈசன் ஊடுருவிநிற்கும் சகல உயிர்களும் உண்மையே! உயிரே உண்மை. ஆயினும் உடலும் உண்மை. அவ்வாறே உயிரும் உண்மை, உயிருக்குயிரான ஈசனும் சிறப்பான உண்மை.

வெயிலினால்தான் நிழல் உண்டாகிறது. ஆனபோதிலும் நிழல் பொய்யல்ல, உண்மையே. உடலை உண்மையாகக் காண்கிறோமாயினும், உடலுக்கு உயிரும் உண்மையும் தருவது கண்ணுக்குக் காணாத உயிரே அல்லவா? ஆத்மா இன்றி உடல் உயிரற்ற சவமாகி

விடும். அதைப்போலவே ஈசன் எல்லா உயிர்களுக்கும் உயிராகி நிற்கிறான். உடலுக்குள் நிற்கும் ஆத்மாவுக்குப் பரம்பொருளே இன்றியமையாத அந்தராத்மா. ஆகவே, உயிர்களெல்லாம் பரமாத்மாவுக்கு திவ்விய சரீரங்கள். சர்வவியாபகமான பரம்பொருளுக்கு உலகம் முழுவதும் ஒவ்வொரு தனிப்பொருளும், சரீரமாகும். அனைத்தும் சேர்ந்து பரமனுக்கு உரு அகண்ட சரீரமாகும். அவையே அவனுக்குத் தனித்தனியான சரீரங்களுமாகும். அந்தராத்மா இன்றி எல்லா உயிரும் வெறும் சவம்போலாகும். நீராவி, மின்சாரம், காந்தம், அணுச்சக்தி முதலிய இயற்கைச் சக்திகளுக்கும் எல்லாப்பொருள்களிலும் ஊடுருவி நிற்கும் பரம்பொருளே மூலாதாரம்.

வேதாந்த உபதேசத்தில் மாயை என்றால் அனைத்தும் பொய், நாம் ஏதேனும் செய்துகொண்டு போகலாம் என்றல்ல. அனைத்தும் உண்மை, அனைத்தும் நியதிக்குட்பட்டது, அனைத்தும் ஈசன் உருவம் என்பதே வேதாந்தம்.

மரத்தை மறைத்தது மாமதயானை
மரத்தில் மறைந்தது மாமதயானை
பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்
பரத்தில் மறைந்தது பார்முதல் பூதமே

—திருமூலர்.

# பக்தர்களைத் தூற்றும் பதர்கள்.

## ஓர் ருசிகரமான சம்பாஷணை.

பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர்:— [நரேந்திரரை (விவேகானந்தர்) பார்த்துச்சிரித்துக்கொண்டு]:—நரேந்திரா! உன் அபிப்பிராயமென்ன? உலகவாழ்க்கையிலிருக்கும் மனிதர்கள் பக்தர்களைப்பற்றிப் பலவாறாகப் பேசுகிறார்கள். ஒரு யானை தன் வழியாகச் செல்லும்பொழுது பல நாய்களும் இன்னும் இதர மிருகங்களும் அதனைப்பின் தொடர்ந்து குலைத்துக்கொண்டும் கூச்சலிட்டுக் கொண்டும் ஓடுகின்றன. ஆனால் யானையோ, கொஞ்சமேனும் செவிகொடாமல் தன் வழி நோக்கியே செல்லுகிறது. அப்பா, உன்னைப்பற்றி உன்மறைவில் இகழ்ச்சியாகப் பேசும் மனிதர்களைப்பற்றி நீ என்ன நினைப்பாய்?

நரேந்திரர்:— நான் அம்மனிதர்களை என்பின்னின்று குலைக்கும் தெரு நாய்களுக்குச் சமானமாக நினைப்பேன்.

பகவான்:—(சிரித்துக்கொண்டு):— இல்லை; அப்பா, நீ அவ்வளவு தூரம் போகக்கூடாது. (யாவரும் சிரித்தல்) சேதனம் அசேதனமாகிய எல்லாவற்றிலும் பகவான் வாசம் செய்கிறார் என்றறி. ஆகையினால் மனிதர், மிருகம், பக்ஷி, தாவரம், உலோகம் முதலான எல்லாவற்றிலும் நாம்கடவுளைப்பார்த்து வணங்கவேண்டும்.

நாம் மனிதர்களோடு பழகும்போது, துஷ்டர்களை விலக்கி நல்லவர்களோடு பழகவேண்டும். பகவான் புலியினிடமும் இருப்பது நிஜமே, ஆனால்எவனாவது அக்காரணத்தைக் கொண்டு புலியைத் தழுவிக்கொள்ள வேண்டுமென்ற ஏற்பாடு இல்லை.

மனிதர்களில் சிலர் சதா பகவானை நாடுகிறவர்களாயும் சிலர் கனவிலும் அவரைநினையாதவர்களாயும் இருக்கிறார்கள். அவர்களெல்லோரிடத்திலும் பகவான் இருக்கிறாரென்பது உண்மையே. ஆனாலும், பின்சொன்னவர்களோடு

நாம் நெருங்கிச்சகவாசம் செய்யக்கூடாது. சிலருடன் தலையசைப்பு மாத்திரம் வைத்துக்கொள்ள வேண்டும். மற்றும் சிலருடன் அதுவும் கூட வைத்துக்கொள்ளக்கூடாது. அப்பேர்ப்பட்டவர்களிடமிருந்து முற்றும்விலகி யிருப்பதே தகுதி.

**நரேந்திரர்:**— சுவாமி, துஷ்டர் நம்மைத்தொந்தரவு செய்ய வந்தாலோ, அல்லது நமக்குத் தீங்கு செய்தாலோ நாம் சும்மாதான் இருக்கவேண்டுமோ?

**பகவான்:**— சன சமூகத்தில் வாழும் ஒருவன் தன்னைக் காப்பாற்றிக்கொள்வதற்கு வேண்டித் துஷ்டர்களை நிக்கிரஹம் செய்பவனைப் போல் பாவனை செய்யவேண்டும். ஆயினும் பதிலுக்குப் பதில் தீங்கு செய்யாமல் சாக்கிரதையாக இருக்கவும் வேண்டும்.

**ஓர் சிஷ்யன்:**— சுவாமி, பகவத் சிருஷ்டியில் துஷ்டர்கள் ஏன் இருக்கவேண்டும்? இவ்வுலகில் தீமை ஏன் இருக்கிறது?

**பகவான்:**— வேறுபாடே பகவத் சிருஷ்டியின் முறை. நன்மை தீமை இரண்டும் இருக்க வேண்டியதுதான். மிருகங்களில் சில சாந்தமாயும் தீங்கற்றவையாயும், மற்றும் சில புலியைப் போல் குரூரமாயும் இதரமிருகங்களைக் கொன்று தின்பனவாயும் உள்ளன. அதேபோல் சில விருக்ஷங்கள் அமிருதமான இனிய பழங்களைத்தருகின்றன. வேறு சில மரணத்தை விளைவிக்கும் நச்சுக் கனியைத்தருகின்றன. அதேமாதிரி நல்லவர்களும், கெட்டவர்களும், மகான்களும், பாபிகளும் உளர். சிலர் பகவத் பக்தியுடையார்; மற்றையோர் உலகப்பற்றுடையார். உலகப்பற்றுடையோர்—உலகப்பற்றில் நின்று நீங்க முயல்வோர், பந்தத்தினின்றும் விடுபட்டவர்கள், பந்தமே இல்லாதவர்கள் என நான்கு வகுப்பாக மனிதர்களைப்பிரிக்கலாம்.

# அருட்பார்வை

(ஸ்ரீ சாதுமுருகதாஸ்)

ஆதி சக்தி எங்கும் உள்ளது. ஆத்ம ஜோதியாக ஒவ்வோர் உள்ளத்திலும் பிரகாசிக்கிறது. ஜீவர்களில் ஒருவரையும் தாழ்த்தவில்லை; உயர்த்தவும் இல்லை. மனித உலகுக்கு "நான்" என்ற அகங்கார சக்தியையும் பகுத்தறிவையும் தந்துள்ளது. மற்ற ஜீவர்களுக்கு தேகபலத்தையும் பலவித யுக்திகளையும் கொடுத்துள்ளது. அந்தந்த ஜீவர்களுக்குத்தக்க ஆகாரவிவகாரங்களையும்படைத்துள்ளது. எல்லாம் தன் தன் தர்மத்தைத் தானுணர்ந்து நடப்பின் ஒன்றிற்கும் துக்கமில்லை. இல்லையேல் ஒன்றை ஒன்று காட்டிக்கொடுத்து பலவிதத்தில் கொன்று தின்று வாழ நேரும். இதற்கெல்லாம் அச்சக்தி அதிகாரியாக இருக்கலாம். ஆனால் பொறுப்பு எனது என்ற அபிமானமுள்ளவரை ஜீவர்களுடையதுதான்.

சுயநலமில்லாது நான் என்பதின்றி தன்னையே உலகக்காக்ஷிகளிலெல்லாம் காணப்பாடு பட்டால் அது காட்டிக்கொடுக்கும். நம்மைச் சுயநலத்தின் கருவியாக்குவது எது? இறை தத்துவத்தினின்று வெகுதூரம் பிரிந்தவராகவும் மறந்து அமைதியற்றவராகவும் நம்மை அலற வைப்பது எது?

அதுவா! அதுதான் "நான்" என்பதினின்றும் தோன்றிய மமகாரதத்வம். இது ஆண்டவனின் உரிமை. இதை அவனுடைய பணிக்காகவே உபயோகிக்க வேண்டும் என்பதை மறந்து, எனது என்ற ஆசைநிறைந்த மமகாரத் திரையைப்போட்டுக்கொண்டமையால் ஏற்படும் அவநம்பிக்கை, அதிருப்தி என்பவற்றைச் சிலர் அறியாமை, இருள், பகுத்தறிவை உபயோகப் படுத்தாத் தன்மை, என்பர். எப்படியாயினும் சரி இதினின்று தப்பி நாம் பூரணத்தைப் பெற்று, நம்முளிருக்கும் அமைதியை அடைவது எப்படி? நம் சுயமுயற்சியால் முடியுமா? என்றால்

ஒன்று:— "யாமோதிய கல்வியும் எம் மறிவும்
தாமே பெறவேலவர் தந்தது
பூமேல் மயல் போயற மெய்ப்புணர்வீர்
நாமேல் நடவீர்நடவீரினியே"

என்ற அனுபூதி வாக்கின்படி அனைத்தையும் அவனுக்காக அளித்து அவன் புகழ்பாடும் நாவுடன் இன்பதுன்பத்தை பிரசாதமாகக் கொண்டு வாழ்வதாகும்.

**மற்றொன்று:**— சுயமுயற்சியால் எப்படியாவது நன்மை என்று பலர்புகழும் சிலஇடங்களுக்குச் செல்லவேண்டும். இதனால் பலவித ஏமாற்றங்கள் ஏற்படலாம், ஆனால் பின்வாங்கக் கூடாது. விடாப்

பிடியாக "எப்படியும் உண்மையான நன்மையைப் பெற்றே தீருவேன்" என்று தளரா உள்ளத்துடன் முன்னேறவேண்டும்.

உலகம் என்பது நியாயம் போன்ற அநியாயமும் அநியாயம் என்ற நினைப்பை நமக்குளெழுப்பும் நியாயமும் நிறைந்தது. உண்மை அன்பும் தளராவுள்ளமும் கொண்டவருக்கு நல்லவர் காட்டும் நன்மை நிச்சயம் கிடைக்கும்.

அப்படி நல்லாருடைய உறவு நமக்கு நேரின், நம்விடாமுயற்சியின் வேகத்தாலும், அடியார்களின் பேதமற்ற கருணையாலும், உண்மைத்தத்துவத்தை நம்முள் உணர்ந்து, அவ்வரிய ஒளியாம் ஆத்ம ஜோதியின் அருளால் அன்பனுக்கித் தடுத்தாளப்பட்டு, ஆதி சக்தியின் அருட்பார்வையின் சக்தியால், சுயநலம் சந்தேகம் ஆசை அதிருப்தி ஆகியவை நீக்கப்பட்டு, நெடுங்காலமாய் அனுபவியாமல் நம்முள் உள்ள அமைதிநிலையை நாம் அறியச் செய்யும். இவ்வரிய ஜோதி நிறைப்பார்வையை உடைய சக்திதான், பராசக்தியென்றும், முருகன் முதலாம் பல திருப்பெயர் கொண்ட சக்திகளாகவும், உலகில் உலவும் தேகதாரிகளான சில ஞானகுருமார்களாகவும், நிலவுகிறது.

மேற்சொன்னபடி எல்லாம்வல்ல சக்தியால் நம்முள் என்றும் நிலவியுள்ள அமைதியை மறைத்துள்ள அழுக்கு சக்திகள் நீங்கப் பெற்று ஆத்ம ஜோதியோடு வேறின்றி ஒன்றி ஒளிக்கு ஒளியாய் களிக்கும் நிலையாய் இருப்பதே சுவானுபூதி.

ஆண்டவன் ஆத்மாவில் பிரகாசிக்கும் ஜோதி. நாம் ஜீவாத்மா. அவனையும் நம்மையும் பிரித்துமறைக்கும் "நான்" என்ற அகங்காரத்திரையை நீக்கும் சக்தி அவன் அன்பும் அருளும் நிறைந்த பார்வை. இருவரும் ஒன்றியபின் ஏற்படுவது அனுபவம். இதைத்தான் சுவானுபூதி என்று அனுபவித்தவர் சொல்வர்.

அனுபவிப்பவனும் அனுபவமும் அற்ற இடமும் ஜோதி நிலையும் கடந்த இடம் ஒன்று. அந்த ஒன்றுதான் எல்லாம். அவன் அருள் பெற்றதை அருணகிரி வேளைக்காரன் வகுப்பில்

**"ஆணவ அழுக்கடையும் ஆவியை விளக்கி**
**அனுபூதி அடைவித்த தொரு பார்வைக்காரனே"**

என்று பாடி ஆனந்த முருகனை ஆத்ம ஜோதியின் அருட்பார்வையைப் புகழ்கிறார்.

வாழ்க அருட்பார்வை! வாழ்க ஆத்ம ஜோதி!!

---

# சுத்தானந்தர் கடிதம்.

## ஓர் இஸ்லாமிய அன்பருக்கு எழுதிய திருமண வாழ்த்து.

புதுவை.

ஒரு நல்ல அன்பர் சாது ஹஃபீஸிடம் 'ஹஜரத், இந்த உலகில் இன்பம் உண்டா? அஃது எப்படியிருக்கும்?' என்று கேட்டார். மஹான் ஹஃபீஸ், 'ஐயா' மெக்காவில் ஹஜரத் அலி, பத்திமாபீபியுடன் நடத்தும் இல்லறத்தைப் பாருமே. அதுதான் இன்பம் என்றார்.

இல்லறமே வீட்டின்பம் இல்லாளும் நல்வாழ்வும்
புல்லித் தழைக்கும் புகழ்.

மற்றொருசமயம், ஹஃபீஸ் 'அன்புதான் இன்பத்தின் உயிர்' என்றார். 'ஹஜரத், ஒருவர் அன்பு எப்படியிருக்கும்? என்று கேட்டார். 'ஐயா, கதீஜா பீபியின் காதலும், முஸ்தபாமுகம்மது ஸல்லத்தின் உள்ளமும் கலந்து நின்ற நிலைதான் அன்பு' என்றார் ஹஃபீஸ்.

மின்னகை குலுங்கும் வாயாள் மென்மொழிக்குயிலேயன்னாள்
பொன்னொளிர் திருமுகத்தாள் புதுப்பொலிவுடைய பொற்பாள்
கன்னலும் பாலும் போலக் கலந்தவர்க்கின்பம் ஆவாள்
அன்னவள் கணவனோடொன் அன்புடைவள்ளலன்றோ

இதுதான் இல்லறத்தின் பண்பு, இல்லறமே வாழ்க்கையின் அனுபவச்சாலை. வீட்டின்விரிவேநாடு.இல்லறம்,பெண்,ஆண்,அன்பு மக்களாக விரிந்து வீடாகி, நாடாகி, உலகாக வளர்கிறது. ஆண் பெண் இரண்டுபேரும் சரிநிகராகக் கூடி நடத்தும் காதல் தவமே இல்லறம்.

பெண்ணின்றி ஆணில்லை ஆணின்றி பெண்ணில்லை
எண்ணிருவர் சேர்ந்தே இகம்.

இல்லறம் ஒரு மின்சார யந்திரம் போன்றது. காதலே திராவகம்; இரண்டு உள்ளங்களே உலோகங்கள்; அன்பும் அறமும் தந்திகள். இவை கூடிய இல்லறமே நவரஸ நாடகமாக நடக்கிறது. இத்தகைய இல்லறவாழ்வில், இருவரும் உள்ளம் பொருந்தி, அன்பு பெருகி, செல்வம் செழித்து, ஈகை தழைத்து, தெய்வபக்தியும் தேசபக்தியும் பெருகி நல மோங்கி வாழ்க!

கண்ணுடன் மணியும் போலக் கனியுடன் ரசமும்போலப்
பண்ணுடன் பனுவல் போல பரத்துடன் சிகமும் போலே
எண்ணுடன் எழுத்தும் போல இதயமும் துடிப்பும் போலே
மண்ணுடன் பயிரும் போல மணர்கள் வாழ்க மாதோ!

---

# ஆத்ம ஜோதி.

---

[“ஆரியானந்தர்” பின்னலூர்,]

[சினிமா வெண்மைப் படுதாவில் இரண்டு மனிதர்கள் தோன்றி **சந்தித்துப்** பேசிக்கொண்டிருந்த காக்ஷியாவது.]

(ஒருவர் டாக்டர், மற்றொருவர் டாக்டருடன் **சம்பாஷிக்கும்** தாண்டவராயன் என்ற **சாதாரண** மனிதன்)

**டாக்டர்:**— நீ யார் ஓய்?

**தாண்டவராயன்:**— யாரை? என்னையா? உமக்குத் தெரியவில்லையா? ஒரு மனுஷன்னு உமக்குத் தெரியவில்லை போலிருக்கு! மாடென்று நினைப்போ? எத்தனையோ தரம் என்னைப் பார்த்திருக்கிறீர்! பேசியுமிருக்கிறீர். தாண்டவராயன்னு உமக்குத் தெரியுமே! கேலி பண்றீரோ?

**டாக்டர்:**— இல்லை! கோவிச்சுக்கப்படாது! நீ யாரென்றால் இவ்வளவு கோபமா? “**நீ யார்**” என்பதை கொஞ்சம் நிதானித்து சொல்லேன்!

**தாண்டவராயன்:**— நிதானிக்கிற தென்னங்காணும்? கண், காது, மூக்கு, வாய், கை, கால் உருவம் எல்லாம் சேர்ந்து அமைப்பாகவும், பகிரங்கமாகவும் உமக்குத் தோன்றுகிறதே அதுதான் தாண்டவராயன்.

**டாக்டர்:**— (தனக்குள்ளாகவே) அடத்தடித்தாண்டவராயா! இப்படிக்கூட அறியாமலிருப்பாயா? உலக முழுதும் இப்படி இருக்குமா! என்று நினைத்து ஜாலவித்தை தெரிந்த டாக்டர் தனது ஆப்பரேஷன் பெட்டியைத் திறந்து மந்திரக்கோல் ஒன்றை எடுத்து தாண்டவராயன் முன்னால் வட்டமாகச் சுற்றி தரையில் தட்டவே திடீரென்று மாயமாக அதே உருவம் போல் அமைந்த மற்றொரு தாண்டவராயன் நின்றான். டாக்டர் தன் முன்னால் நின்ற தாண்டவ்ராயனைப் பார்த்து



**டாக்டர்:**— நீங்கள் யார்?

**தாண்டவராயன்:**— ஒருவரைஒருவர் பார்த்து இருவரும் சற்று மௌனமாக இருந்து ஒரேமாதிரி நகைத்தனர். விழித்தனர், நாங்கள் யாரென்பதை நீங்களே தெரியச்செய்யுங்கள்.

**டாக்டர்:**— இனி நான் செய்யும் வேலையைக் கவனித்து பொறுமையோடு கேட்பதற்கு மாத்திரம் பதில் சொல்லுங்கள்.

**தாண்ட:**— நல்லதுங்க! அப்படியே ஆகட்டும்.

**டாக்டர்:**— இரண்டு நடைப்பிணங்களையும் வட்டமேஜைக்கருகில் அழைத்துப்போய் தனது ஆப்ரேஷன் பெட்டியிலிருந்து பளபளப்புள்ள கூர்மையான கத்தி ஒன்றை எடுத்து (தான் சிருஷ்டித்த தாண்டவராயன் கண்களை அடியோடு தோண்டி மேஜைமேல்வைத்து)இந்தக்கண்கள் நீயா?

**தாண்ட:**— இந்தக்கண்கள் நானல்ல.

**டாக்டர்:**— (காதுகளை அடியோடு அறுத்துக்காண்பித்து) இந்தக் காதுகள் நீயா?

**தாண்ட:**— காதுகள் நானல்ல.

**டாக்டர்:**— (மூக்கை அறுத்துக்காண்பித்து) மூக்கு நீயா?

**தாண்ட:**— மூக்கும் நானல்ல.

**டாக்டர்:**— (பேசுவதற்குக் காரணமான நாக்கை அறுத்துக் காண்பித்து நாக்கு நீயா?

**தாண்ட:**— நாக்கும் நானல்ல.

**டாக்டர்:**— (இப்படிக் கண், காது, மூக்கு, நாக்கு நீக்கிய பிரேதத்தை காலில் கயிற்றினால் கட்டி தலைகீழாக தொங்கவிட்டு மேல் தோல் முழுவதையும் உரித்து) இந்தத்தோல் நீயா?

**தாண்ட:**— இந்தத்தோலும் நானல்லவே!

**டாக்டர்:**— மேல் தோல் நீக்கித் தலைகீழாகத்தொங்கும் பிரேதத்தின் வயிற்றைக்கத்தியினால் குடைந்து அதற்குள் தன்கையை

விட்டுத் துளாவி இதோ உன்னுள்ளிருந்து மனம் என்னும் கறுப்புப்பந்து, புத்தி என்னும் வெள்ளைப்பந்து, சித்தம் என்னும் பச்சைப்பந்து, அகங்காரம் என்னும் சிவப்புப்பந்து, உள்ளம் என்னும் நீலப்பந்து ஆகிய ஐந்து கலர்கள் போன்றதை மேஜை மேல் வைத்திருக்கிறேன் இவைகளில் நீ எதுவாயிருக்கலாம்?

**தாண்ட:**— இவைகள் எல்லாமே நானல்ல!

**டாக்டர்:**— (மறுபடியும்) இதோ உன்னுள்ளிருந்து உல்லன் பஞ்சவர்ணக்கலர் நூல் போலுள்ளதாகிய மாயை என்னும் கறுப்புவர்ணம் ஜீவனென்னும் பச்சைவர்ணம் பிராணன் என்னும் நீலவர்ணம பிரகிருதி என்னும் மஞ்சள் வர்ணம், நீ மூச்சு விடும் சுவாசம் என்னும் சிவப்பு வர்ணம், இப்படி அமைந்து சன்னல் பின்னலாக உள்ள நூலை மேஜையின் மேல் வைத்திருக்கிறேன் பார்! இது நீயாக இருக்கலாமா?

**தாண்ட:**— இவைகளும் நான் கிடையாது!

**டாக்டர்:**— இதோ உன்னுள் இருக்கும் சாக்கிரம், சொர்ப்பனம், சுழுத்தி என்னும் மூன்று லீவர்களுள்ள பூட்டை உடைத்து, அந்த அறையினுள் கிடைத்த சத்து சித்து ஆனந்தமெனும் வஸ்து ஒன்று அகப்பட்டதை வைக்கிறேன் பார் என்ன பிரகாசம்! இது நீயாக இருக்கலாமோ!?

**தாண்ட:**— ஆகா! இந்த ஜோதி வஸ்துதானய்யா நான்! இத்தனை நாளும் மடத்தனமாக அடிக்கடி நினைக்கும் மனது, தேகம், கண், காது மூக்கு இவைகளெல்லாம் நான்தானென்று ஒன்றுமறியாமலிருந்தேன். இப்போது நீங்கள் ஒவ்வொன்றாகத் தனித்தனியே புட்டுப்புட்டுக்காட்ட உண்மை விளங்கிற்று. இனி நான் ஏமாற மாட்டேன். தாங்கள் என்னுள் இருந்த அற்புத ஜோதி வஸ்துவாகிய ஆத்ம ஜோதியை தனியே மேஜைமேல் வைத்துக்காட்டிய பின்புதான் சந்தேகம் முழுமையும் நீங்கிற்று. நான் இத்தனைநாளும் மனத்தின் வசப்பட்டு சுகம், துக்கம், லாபம், நஷ்டம், இவைகளில் உழன்று வெந்து அவஸ்தைப்பட்டது போதும்! போதும்!! இனி அந்த மாய மனது என்னை ஏமாற்றவே முடியாது. அந்த ஆத்ம ஜோதியின் சக்தியே என் கைகால்களை அசைக்கவும், வாயினால்



பேசவும், பலவிதமாக உணரவும் செய்ததென்பது செவ்வனே தெரிந்துவிட்டது. இனி அந்தச் சமாச உணர்ச்சி நிலையிலேயே இருப்பேன். என்னென்னமோ சொல்லுகிறீர்களே! கர்மம், பக்தி, யோகம், ஞானம் எனக்கு அந்தச் சமாச்சாரமே வேண்டாம் சுவாமி! பகிர்முகத்தில் ஏமாறமாட்டேன். அந்தர்முக அமைதியிலேயே இருப்பேன். இதை விட எனக்கு வேறென்ன வேண்டும். என்னுடைய நல்லகாலமே உங்களை இங்கு சந்திக்கும்படி விட்டது.

**டாக்டர்:**— அப்பா! நீ யாரென்பது உனக்கு நன்றாக விளங்கிவிட்டதனால் உன்னை திரிமூர்த்திகளாலும் இனி அசைக்க முடியாது. நீயேபொருளென்று அறிந்தபடியால் உன் உள்ளே அசைவற்றிரு. போய்வா!

**தாண்டவராயன்:**— ஏ மகானுபாவா! எனது பிறவிப்பிணிக்கு "ஆத்மஜோதி" எனும் நன் மருந்தளித்த சற்குருவே' மனம் வாக்குகாயம் உட்பட எனது நமஸ்காரம்.

---

**ஆத்ம சக்தி பொங்க வேண்டும்**

விண்ணிற் பறந்தென்ன மீன்கள்போல் நீரிலே
வேகமாய் நீந்தியென்ன
வேறு தேசத்திருந் தாகாய மார்க்கமாய்ச்
செய்திகள் விளம்பியென்ன
எண்ணுக் கடங்காத செல்வமும் பெற்றென்ன
இராச போகத்திலென்ன
இரவுபக லறிவான புத்தகங் கற்றென்ன
இனிமையாய்ப் பேசியென்ன
பண்ணிற் சிறந்தென்ன பாகவத ராகியிப்
பாரெலாம் போற்றியென்ன
பலசாலி ஆகியிவ் வுலகிலே ஜெயவிருது
பலபல படைத்துமென்ன
மண்ணிற் பிறந்துதம் பிழையுணர்ந் தாத்மீக
வாழ்வினைக் காணவறியா
மனிதராற் பலனென்ன புனிதவாழ் வருளுவாய்
மாசற்ற கருணை வாழ்வே.

"சுதந்திர ஜீவன்"

# உனக்கு வேண்டுவது யாது?

(முத்து)

இந்தக்கேள்விக்கு எல்லோரும் வித்தியாசமான விடையே அளிப்பார். இரண்டுபேர் ஒருமாதிரி விடையளித்தலே அபூர்வமாயிருக்கிற போது எல்லோரையும் பற்றிய பேச்சுக்கே போகவேண்டிய அவசியமில்லை.

ஒரு குளத்தங்கரையில் இருவர் தவம் செய்துகொண்டிருந்தனர். தேவி பிரசன்னமானாள். முதலாம் மனிதனிடம் சென்றாள். இவன் தான் வந்த காரியத்தை மறந்தான், இரண்டாமவன் என்ன கேட்பானோ? அவனைக் கெடுக்கவேண்டும் என்பது இவன் எண்ணம். ஒரு கண் குருடாக வேண்டும் என்றான். தேவி விரும்பிய வரத்தைக் கொடுத்து இரண்டாம் மனிதனிடம் சென்றாள். முதலாம் மனிதனிடம் பொறாமை குடிகொண்டிருந்தது போன்று இவனிடம் பேராசை குடிகொண்டிருந்தது. தேவி யாது வரம் வேண்டும் என்றாள். எனக்கு அக்கரையில் இருக்கும் மனிதன் பெற்ற வரத்தில் இருபங்கு தேவை யென்றான். உடனே இருகண்களும் மறைந்தன.

இக்கதையிலிருந்து நாம் அறியக்கூடிய ஒருண்மை மனிதனது தேவை அவனுடைய மனதைப் பொறுத்ததே. முதலாம் மாசக்குழந்தை தனக்குப் பக்கத்தில்யாராவது ஒருவர் இடைவிடாது இருக்கவேண்டுமென்றே விரும்புகிறது. ஒருவருடக் குழந்தை தாயைத்தவிர வேறு யார் இருந்தாலும் விரும்புவதில்லை. இரண்டு மூன்று வயது வந்துவிட்டால் விளையாட்டுப்பொருட்களையே கட்டியணைத்துக்கொண்டு தூங்குவார்கள். ஐந்து வயது வந்துவிட்டால் சிநேகிதரே வேண்டிய பொருளாகி விடும். வயதிற்கும் மனதிற்கும் தக தகரங்கள் முதல் கடவுள் ஈறாக வேண்டிய பொருளாகப் பாலியப் பருவத்தில் காணலாம்.

ஒரு பருவத்தில் தன்னை யழகுபடுத்தல் ஒன்றே பிரதானமாகத் தோன்றும். இன்னொரு பருவத்தில் கல்வியிலும் மற்றைய விஷயங்களிலும் தானே முதன்மையாக இருக்கவேண்டுமென்று மனம் விரும்பும். இத்தேவை கருத்திற்கிசைந்த கண்ணுக்கு நிறைந்த கட்



டழகியை மனைவியாகப் பெறுவதோடு நில்லாமல் பிள்ளைகள் வீடு வாசல்கள் பணப்பெருக்கங்கள் யாவற்றிலும் விரிவடைந்து கொண்டே போகத் தேகத்திலுள்ள வாலிபதசை குறைகிறது. அப்போ தேவைப்பட்ட பொருட்கள் மேலெல்லாம் ஒருவித வேண்டாமை ஏற்படுகிறது.

அது உண்மையான வேண்டாமையல்ல, இன்பம் அனுபவிப்பதற்கேற்ற சக்தி தேகத்திடம் இல்லாத போது அதனால் ஏற்படும் ஓர் வெறுப்பு. பல்லிருக்கும் போது முறுக்கை விரும்பிச்சாப்பிட்டவர் பல் இல்லாத காலத்தில் வேண்டாமென்றால் ஆசையுண்டு இயல்பில்லை என்பது கருத்து. இப்படியெல்லாம் உலகத்தேவைகளை அனுபவித்து மனம் சஞ்சல முறும்போது அதற்கெதிரான சாந்தியை படைய மனம் அவாவுறுகிறது. அச்சாந்தியை எண்ணுவதற்கு மனதிலும் பெலம் இல்லை. உடலிலும் சக்தியில்லை.

ஏதோ உலகஒப்பாசாரத்திற்காகக் கோயிலுக்குச் செல்கிறார்கள். யாத்திரை போகிறார்கள். மனதில் சாந்தியைக்காணோம். மகான்களைத்தேடி ஓடுகிறார்கள். அங்கும் இதே நிலைபரம்தான். இத்தருணத்திலேதான் பரமகம்சர் சொல்லுகிறார் ''ஒருமுறை சுட்ட மண்ணைக்கொண்டு இன்னொரு புதிய பாத்திரம் செய்யமுடியாது'' பகவானிடத்திலும் எல்ல வேண்டுகிறார்கள். முன்பு அனுபவித்த இன்பங்கள் பூர்த்தியடையவில்லையே அவற்றை எப்போ அனுபவிக்கப்போகிறோம் என ஏங்குகிறார்கள்.

இந்நிலைபரத்திலுள்ளார், ஒரு இளம் வயது வாலிபன், விவேகானந்தரது பிரசங்கத்தையோ அன்றிப்பட்டினத்தார் துறவையோ வைத்துப் படித்துக்கொண்டிருப்பதைப் பார்த்து விட்டால், தம்பி இந்த வயதிலே உந்தப் புத்தகங்களைக் கனவிலும் நினைக்காதே. அவையெல்லாம் படிப்பதற்குக் காலம் இருக்கிறது. காலாகாலத்தில் ஒரு கலியாணத்தைக் கட்டி 4, 10 பிள்ளைகுட்டிகளைப்பெற்று அதன்பின்பல்லவா இவற்றைப்படிக்கவேண்டுமென, உபதேசம் செய்கிறார்கள். வாலறுந்த நரி கடவுளைக்காட்டிய கதைதான் இவர்கள் விஷயத்திலே பொருத்தமாயுள்ளது.

இப்படி எல்லோரையும் குறைகூறிக்கொண்டு செல்லுகிறீரே ''உனக்கு வேண்டுவது யாது? என வாசகர்கள் திருப்பிக்கேட்கிறு

ர்கள். அன்பர்களே! மகான்களுடைய கருத்துக்களைத் தெரிந்த பின் அதையொட்டி இவன் தனது தேவையைக் கூறுகிறான்.

"புழுவாய்ப்பிறக்கினும் புண்ணியா உன்னடி
வழுவா திருக்க வரந்தர வேண்டுமிவ்வையகத்தே"

என்கிறார் ஒரு அருட்பெரியார்.

யோகிசுத்தானந்தர் கூறுகிறார்—

"எனதென தென்ன விடாகு மென்றும்
அவனது வென்ன அருள்"

பெற்ற பிள்ளைக்கு மாத்திரமன்று பேரப்பிள்ளைக்கும் அப்பிள்ளைக்குப் பிறக்கப்போகும் பிள்ளைக்குமே சம்பாத்தியம் தேடிவைத்துச் செல்லும் உலகம் சுத்தானந்தரின் யோகசித்தியையா கவனிக்கப் போகின்றது.

வள்ளலார் ஒன்பது வயதிலே வேண்டுகின்றார்—

"ஒருமை யுடனினது திருமலரடியிணை நினைக்கின்ற
உத்தமர்தமுறவு வேண்டும்"

சுவாமி சுத்தானந்தர் ஐந்து வயதிலே—

"அம்மா பரதேவி தயாபரியே
சும்மா உலகின் சுமையாகவிரேன்
எம்மாத் திரமுன் பணியிங் குளதோ
அம்மாத்திரம் வைத்தடி சேர்த்தருள்வாய்"

உன் பணிசெய்ய உன்னடியில் வைத்துக் காப்பாய் என வேண்டுகின்றார்.

மாணிக்கவாசகப்பெருமான்—

"வேண்டும் வேண்டு மெய்யடியா ருள்ளே விரும்பி எனை அருளால்
ஆண்டா யடியேன் இடர்களைந்த அமுதே அருமாமணி முத்தே
தூண்டாவிளக்கின்சுடரனையாய்தொண்டனேற்கும்உண்டாங்கொல்
வேண்டா தொன்றும் வேண்டாது மிக்க அன்பே மேவுதலே"



வேண்டிய தொன்றும் இல்லை என்கிறார். இக்கருத்துப் பற்றிச் சாது முருகதாஸ் அவர்கள் ஓரிடத்தில்—

"உனக்கு வேண்டுவது யாதென்பான்—நீ
எனக்கு வேண்டாமை தாவென்பாய்" என்கிறார்.

அதையே நீங்களும் திருப்பிக்கேட்டால்

இவனுக்கு வேண்டாமை வேண்டும்

என்று கூறி வணக்கம் கூறுகின்றான்.

---

## நெஞ்சமே கேள்.

உண்பது முடுப்பது முறங்குவது மன்றிநீ
உறங்கி விழியாத காலம்
ஒன்றுவருமென் றுணர்ந் தொருகணப் போதேனும்
ஊன்றி ஆராய்ந்த துண்டோ
பண்படும் பாலப் பராயங் கடந்தபின்
பதைபதைத் தென்னபேறு
பாரெலாம் வீரனென் றோதினும் நீசெய்த
பாவங் கழிந்துபோமோ
கண்படும் போதுனது பெண்டிரும் பிள்ளையும்
கனதனம் யாவுமெங்கே
கனவென்ற வாழ்வுனது துணையென் றிருந்திலவு
காத்தகிளி போலாவதோ
புண்படு மனத்தையொரு போதேனு மடக்கிப்
பொய்யுலகை நீமறந்து
பொன்னருட் சோதி வெள்ளத்திலே நீந்துவாய்
பூரணா னந்தமுண்டோ.

"சுதந்திர ஜீவன்"

# பிரார்த்தனையின் மகத்துவம்.

**அன்பழகு.**

மகாத்மாகாந்தியடிகள் கூறுவதாவது:—

நாம் நமது சகோதரர்களுக்குத் தொண்டாற்றப் பிறந்திருக்கிறோம். அதற்காகத் தக்கதருணத்தை நாடிக்கொண்டிருந்தாலல்லது அதைச் சரிவரச் செய்ய நம்மால் இயலாது. மனிதர்களது மனதில் சதா ஞானத்திற்கும் அஞ்ஞானத்திற்கும் பெரும் போர் நிகழ்ந்துகொண்டிருக்கிறது. எவனுக்குப் பகவத்தியானமாகிய பற்றுக்கோடில்லையோ அவன் அஞ்ஞானத்திற்கு இரையாவான். பிரார்த்தனையுடையவன் தான் சாந்தியையடைவதுமன்றித் தன்னைச் சார்ந்தவர்களுக்கும் சாந்தியையளிக்கிறான்.

எவனொருவன் பிரார்த்தனையற்ற மனத்துடன் உலக விஷயங்களில் பிரவேசிக்கிறானோ அவன், தனக்குத் துன்பத்தைத் தேடிக்கொள்வதுமல்லாமல், உலகத்தையும் துன்பத்துக்குள்ளாக்குகிறான். ஆகையால் தியானம் மனிதனது இறப்பிற்குப்பின் ஏற்படும் நிலைக்கு ஆதரவாயிருப்பதோடமையாது, இவ் உலகவாழ்விலும் இணையற்ற உதவி பயப்பதாகும். நாம் நமது தினசரி வாழ்க்கையில் அமைதியும், ஒழுங்கும், சாந்தியும் அடையவேண்டுமாயின் தியானத்தையே பின்பற்றவேண்டும். இதைவிடச் சிறந்த நெறி வேறெதுவுங் கிடையாது.

ஆகையால் வைகறையில், உங்கள் தினசரித் தொழில்களை ஆரம்பிக்குமுன், இரவுவரை உங்களிடம் நிலைத்திருக்கும்படியான உயிர்ப்புள்ள ஒரு பிரார்த்தனையைச் செய்யுங்கள். இரவு படுக்கைக்குப் போகும்போதும் அமைதியை அடையும்பொருட்டுப் பிரார்த்தனைசெய்துவிட்டுப் படுங்கள்.

பின்வரும் பிரார்த்தனை பலருக்கும் பயன்தரத்தக்கது. அனைவரும் அனுதினமும் ஆண்டவனை வேண்டி அன்புடன் பிரார்த்தித்தற்கு அவசியமானது. சர்வசமய சமரசமாகவுள்ளது. பிரார்த்திப்போர்க்குப் பேரன்பைப் பெருக்குவது.

# "பாதம் பணிவோமடி"

**"கன்னிக்கவி"**

1. 'அன்னை' யென்றதுமே....அன்னம்மா அன்பு பிறக்குதடி
கன்னி உள்ளத்திலே....அவளருள் கீதம் சுரக்குதடி

2. 'சக்தி' யென்றதுமே....சகியே சாந்தம் உதிக்குதடி
பக்திப் பெருக்கதினால்....உள்ளமும் பரவச மாகுதடி

3. தாயின் தன்மையினால்....தோழி தவமும் பலிக்குமடி
சேயின் சோர்வினையே....அன்னை சாந்தம் தவிர்க்குமடி

4. அன்னையை நினைந்திடுவோம்....அவள் ஆனந்த தாண்டவத்தில்
உன்னைச் சுற்றி நிற்கும்....உலகமும் உய்வழி காணுமடி

5. சக்தியின் தரிசனமே....சகியே சத்தியஒளியாமடி
பக்திவழி சென்றே....அன்னை பாதம் பணிவோமடி

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

**சர்வசீவதயாபரமூர்த்தி!** சர்வசீவர்களிடத்தும் தமியேனுக்குப் பேரன்புண்டாகவும். அவை துன்பம், நோய், பேராசை, தரித்திரம், நிர்ப்பந்தம் ஆகியவற்றினின்று நீங்கி நன்மை பெறவும், தமியேன் பகை, பொறாமை யாதியாம் துர்க்குணங்களை விடுத்து அடக்கம், பொறை, வாய்மையாதியாம் நற்குணங்களை மேற்கொண்டொழுகவும், தேவாதி தேவனாகிய பரம்பொருளே! உமது திருவருளைத் தமியேன் ஒருபொழுதும் மறவாத அத்தியந்த பத்தியுடையவனாயிருக்கவும்; என்னுயிர்போல மன்னுயிரை மதித்து எவ்வுயிரிடத்தும் அன்பு, பணிகளையாற்றவும், அகில லோகத்திலும் அன்புப் பணிகள் அபிவிருத்தியாகி அன்புநெறி தழைத்தோங்கவும் அநுக்கிரகஞ்செய்வீராக!

# வெள்ளியெழுச்சி!

—:—:—:—

சுந்தரம்

உலக மகாயுத்தம் ஓய்ந்தும், எங்கும் புரட்சிகளும் போலிக் கொள்கைகளும் நிறைந்து உலகம் அல்லோலகல்லோலப்படுகிறது. உலகமுழுவதும் இலௌகிகத்திலேயே மூழ்கிக்கிடக்கிறது, இலௌகிக உயர்ச்சிக்குரிய இலட்சியங்களிலேயே உறுதியாக நிற்கிறது. ஆத்மீகத்தை அறவே மறந்துவிட்டது.

புரட்சிகள் நிறைந்த இவ் அணுசகாப்தத்திலே நமது சத்சமயம்—சமயநெறி—பரிபாலிப்பின்றி நாளுக்குநாள் விருத்திகுன்றி வருகின்றது. சமயநெறிகளைப் பரப்புதற்கு ஏற்பட்டுள்ள நிலயங்களெல்லாம் உலக விவகாரங்களிற் சிக்குண்டு தத்தமது இலட்சியங்களில் தவறுண்டு நிற்கின்றன. இப்படியே இன்னும் சிலகாலம் செல்லுமாயின் நமது சமயநெறி தப்பாது குன்றும்.

சமயநெறி குன்றிய இக்கொடிய இருட்காலத்திலும் ஆங்காங்கு ஒளிக்குரிய சில அறிகுறிகள் தோன்றாமலில்லை. அவற்றுள் ஒன்றுநமது அரியகவனத்திற்குரிய 'ஆத்ம ஜோதி' மாதவெளியீடாகும். இது புதியதொரு 'வெள்ளி யெழுச்சி' போன்றது. 'ஆத்ம ஜோதி' யானது, ஆத்மாவாகிய ஜோதி (விளங்குவது) என்றும், ஆத்மாவுக்கு ஜோதி (தருவது) என்றும், ஆத்மாவுடைய ஜோதி (விளக்குவது) என்றும் அநேக கருத்துக்களைக் கொண்டதாயிருக்கின்றது.

உலகம் பல்வேறு துறைகளில் உழைப்பதற்குச் சாதகமாக எத்தனையோ சாதனங்கள் அமைந்திருக்கின்றன. ஆயின், ஆத்மீகத்துறைகளில் ஈடுபட்டு உழைப்பதற்கு மிகச்சில சாதனங்களே வாய்த்திருக்கின்றன. ஆதலால் ஆத்மீகத் துறையில் உழைக்க முளைத்திருக்கும் 'ஆத்ம ஜோதி' நம்மனைவராலும் வரவேற்கத்தக்கதொன்றாகும். இவ் அரிய சஞ்சிகையை வெளியிடமுன்வந்த அன்பர்களுக்கு எம்மனோரது ஆதரவும் நன்றியும் என்றும் உரியனவாகும். அதற்கு விஷயதானம் புரியும் யோகி சுத்தானந்தர், சாது முருகதாஸ்போன்ற பெரியார்களுக்கு எமது பணிவான வணக்கங்கள் உரித்தாகுக.

# ஸ்ரீ ரமண தேசிகன்றுணை.

—:—:—:—

விருத்தம்.

கருணைமணங் கந்திக்கும் கமலத்தே யினிக்கும்
கதிக்குவழி காட்டிவிடும் வேதமணம் நாறும்,

பொருணிறைந்த சிவயோக மணம்வீசும் ஞானம்
பொங்கிவரும் வேதாந்த மணங்கமழும் பொல்லா

மருணீக்கும் மாமலராம் மோனமணம் மணக்கும்
மதிபெருகும் சித்தாந்த மணம் பரிமளிக்கும்,

அருணைவாழ் ரமணகுரு ஆனந்தமருளும்
அவதார அண்ணலடி அருமலரி னிடத்தே.

—பின்னலூர் துரியானந்தர்

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

'முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னுன் முடியு' என மணிவாசக முனிவர் மொழிந்தபடி, 'ஆத்ம ஜோதி' அன்பர்களது அரிய முயற்சி போதிய பொருளின்றிப் பெரும் பயன் விளையாதன்றோ! ஆகவே அனைவரும் அவசியம் முன்வந்து 'ஆத்மஜோதி' யின் ஆண்டுச் சந்தாதாரர்களாகவோ, ஆயுட்சந்தாதாரர்களாகவோ ஆகி ஆதரவு புரியவேண்டும். அதன் வரவை ஆவலுடன் எதிர்பார்க்கவேண்டும். 'ஆத்ம ஜோதி' மாதவெளியீடு பக்ஷவெளியீடாகவும், பக்ஷவெளியீடு வாரவெளியீடாகவும் வருதற்கு ஆவனசெய்து அதனைப் பரிபாலிக்கவேண்டும். 'ஆனந்த விகடன்', 'கல்கி' ஆதியாம் விஷயானந்தம் தரும் சஞ்சிகைகளை எத்துணை ஆர்வத்தோடு வரவேற்கின்றோமோ, அத்துணை ஆர்வத்தோடாயினும் 'ஆத்ம ஜோதி'யை வரவேற்று ஆத்மாநந்தம் அடைவோமாக! அதனால் உயிர்க்கு உறுதிபெற்று உய்வோமாக!

சாந்தம்-சிவம்.

## சமரசசன்மார்க்க வாசிகசாலை.

[கடவுளுக்கும் மனிதனுக்கும், மனிதனுக்கும் மனிதனுக்குமிடையேயுள்ள அத்யாத்ம உறவை விளக்கி, சமரஸ நெறியைப் போதிக்கும் வெளியீடுகளைப்பற்றிய மதிப்புரைகளே இப்பக்கத்தில் வெளிவரும்.—ஆசிரியர்]

### திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்

ஆக்கியோன்
**வித்துவான் மு. வரதராசன்,**
தமிழ்ப் பேராசிரியர்,
பச்சையப்பன் கல்லூரி, சென்னை.
வெளியிட்டோர்:
**பொதிகைப் பதிப்பகம்,**
கடலூர் என். டி. விலை ரூ 7.

இம்மண்ணுலகில் தமிழ்மொழி வழங்கும்வரையில் விளங்கக்கூடிய இருநூல்கள் சென்ற ஆண்டில் (1948) வெளிவந்துள்ளன. ஒன்று புதுவை யோகி ஸ்ரீசுத்தானந்தர் இயற்றிய 'பாரத சக்தி மகாகாவியம்' மற்றையது சென்னை வித்துவான், மு. வரதராசனார் எழுதிய 'திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம், இவ்விரண்டிற்கும் ஒரேவாரத்தில் [முந்தியது 12-5-48; பிந்தியது 15-5-48[ அச்சுவாகனம் ஏறியதும் வியப்புக்குரிய விஷயமாகும்.

திருக்குறளானது தமிழரின் நாகரிகத்தின் உரைகல்லாகி அவர்களின் அகப்புறவாழ்வின் விளக்கமாய், தமிழின் முதுமைக்கும் இளமைக்கும் ஒப்பற்ற சான்றாய் விளங்கும் பொதுமறையாகும். வித்துவான் வரதராசனாரின் புரட்சி முறையையும், எளிய இனிய நடையையும், தெளிவான கருத்துக்களையும் பார்க்கும்போது 'தீதற்றோர் உள்ளுதொறுள்ளுதொறுள்ளமுருக்குமே, வள்ளுவர் வாய்மொழி' என்ற மாங்குடி மருதனார் வாக்கே நினைவிற்கு வருகின்றது. இதுவரையில் தோன்றிய திருக்குறள் உரைகளிலோ, ஆராய்ச்சிக் கட்டுரைகளிலோ கண்டிராத உள்ளமுருக்குந் தன்மையானது புதுமைப் போர்வையில் வெளிவந்த இந்த நூலில் மிகவும் அருமையாக அமைந்துள்ளது.

நூலின் அணிந்துரையில் திரு. வி. க. அவர்கள் அழகாய் விளக்கியவண்ணம், பொதுமையும் மனத்தூய்மையுமே நூலின் நுரைஈரல்களாயமைந்து 'உலகம் ஒரு குலம்' என்னும் உயிர்ப்பை இயக்குகின்றன. வாழ்க்கையின் படிகள் காதலும் பொருளும், அதின் உயர் நிலையே அறம். ஆகையால் அறப்புரட்சி வீரரான வரதராசனார் திருக்குறள் பால்வைப்பையே தலைகீழாக மாற்றியுள்ளார். இவ்விதம் ஆரம்பிக்கும் புரட்சித் துணிவை நூல் முழுவதிலுமே பாக்கக் காணலாம். இவற்றையெல்லாம் கருத்தூன்றிக் கற்போர் உள்ளத்தில். திருவள்ளுவரே தமது வேதத்திற்குக் காலதேவி வேண்டிநிற்கும் உரையை வரையவரதராசனாராய்த் தோன்றியுள்ளனரோவென்ற எண்ணம் உதிக்கச்செய்யுமென்பது திண்ணம்.



இந்த உரைவிளக்கத்தில் எல்லாக்குறள்களும் எடுத்தாளப்படவில்லை. காலத்திற்குத் தேவையான மணிகள் மாத்திரம் சிறப்பாக ஒளிவீசுகின்றன. ஸ்ரீமத் பகவத்கீதையை 'கண்ணன் காட்டிய வழி' யென விளக்கிய ஸ்ரீ ராஜாஜி கையாண்ட அற்புத முறையையே இங்கு ஆசிரியர் பின்பற்றியுள்ளார். தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு பாடசாலையிலும் கட்டாயப் பாடப்புஸ்தகமாக இருக்கவேண்டிய இந்த அரிய நூலை மலிவான விலைக்கு அச்சிட்டுப் பரவச்செய்ய செல்வர் எவராவது முன்வந்தால் பெரும் உதவியாக இருக்கும்.

'ஆத்ம ஜோதி'யின் அடுத்த சுடர் திருவள்ளுவர் மலராக வெளிவரப்போவதால் அதில் திரு. வரதராசனாரின் 'வாழ்க்கைவிளக்கம்' போதிய இடம் பெறும்.

எக்காலத் திற்கு மிசைந்தகருத் துள்ளதெனத்
தக்கோர் புகழுந் தமிழ்மறைக்கு—இக்கால
ஆராய்ச்சி யேற்கு மரியவுரை தந்தார்
சீர்வரத ராசனார் தேர்ந்து.

---

### வைத்தீஸ்வரன்

ஆசிரியர்
திரு. சி. சிவகுருநாதன்
வைத்தீஸ்வரவித்தியாலயம்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரன் வித்தியாசாலையிலிருந்து, அதில் சேவைசெய்யும் உபாத்தியாயர்களுள் ஒருவரான திரு. சி. சிவகுருநாதன் அவர்களை ஆசிரியராகக்கொண்டு மேலே குறிப்பிட்ட சஞ்சிகை ஆங்கிலத்திலும் தமிழிலும் தோன்றியிருப்பது கண்டு மகிழ்ச்சியடைகிறோம்.

ஸ்ரீ ராமகிருஷ்ணதேவர் சுவாமி விவேகானந்தர் இருவரதும் உபதேச மொழிகளைப் பேணி, சமரஸ சன்மார்க்க நெறியில் நடைபெறும் இந்த வித்தியாலயத்தின் முதலாவது சஞ்சிகை, அவற்றையே பின்பற்றி வாழ்க்கை நடத்தும் சென்னைமாகாணக் கல்விமந்திரி கனம். தி. சு. அவினாசிலிங்கம் செட்டியார் அவர்களின் அன்புச்செய்தியுடன் ஆரம்பித்திருப்பதும் மிகவும் பொருத்தமுடைத்து. அதில் அவர் மனஒருமையே கல்வியின் அடிப்படையான லட்சியம், என்ற விவேகானந்தர் திருவாக்கை எடுத்து அழகாய் விளக்கியுள்ளார்.

தலைமை ஆசிரியரான திரு. அம்பிகைபாகன் அவர்களின் அறிக்கையோடு பல அரிய கட்டுரைகளும் இந்தமுறை வெளிவந்துள்ளன. பாடசாலை பரீட்சைகளைப் பற்றி ஆங்கிலத்தில் திரு, S. U. சோமசேகரம் அவர்கள் ஓர் நீண்ட கட்டுரையை மிகவும் ரசமான முறையில் ஆராய்ச்சி உண்மைகளோடு வரைந்துள்ளார். செல்வி ம. கமலாதேவி பெண்களின் சம உரிமைகள் குறித்து எழுதியுள்ள கட்டுரை பாராட்டத்தக்கதாகும். அடுத்த வெளியீட்டில் எம் தாய்மொழி கூடியஇடம் பெறுமெனஎதிர்பார்க்கின்றோம்.

# செய்தித்திரட்டு.

## வாரவழிபாடு

முன்னர் குறிப்பிட்ட இடங்களிலெல்லாம் வழிபாட்டுக் கூட்டங்கள் ஆர்வத்துடன் நடைபெறுகின்றன.

காரைநகர். சண்டிருப்பாய் ஆகிய இரு இடங்களிலும் கூட்டுப்பிரார்த்தனை ஆரம்பமாகி நடைபெறுவது கேட்டு மகிழ்வடைகின்றோம்.

## ஸ்ரீரமண ஜெயந்தி

19-12-48 வெள்ளவத்தை சத்சங்க ஆதரவில் காலை 8 மணி தொடக்கம் பகல் 1-30 மணி வரைக்கும் அற்புதமாய் நடந்தேறியது. அப்போது திரு. V. F. குணரத்ன அவர்கள் பகவானின் உபதேசங்குறித்து மிகவும் உருக்கமாய்ப் பேசினர். அதன்பின் மகேஸ்வரபூஜை நடைபெற்றது,

25-12-48 வதுளையில் சைவபரிபாலன சபையின் ஆதரவில் சரஸ்வதி வித்தியாசாலையில் நடைபெற்றது.

26-12-48 நுவரெலியாவில் மாரியம்மன் கோயில் நிர்வாகிகள் ஆதரவில் ஹோலி ரிறினிற்றி கல்லூரி மண்டபத்தில் மிகவும் அமைதியான முறையில் நடந்தேறியது. நுவரெலியாவில் இதற்குமுன் இதுபோன்ற புனிதவிழா நடக்கவில்லையெனப் பலரும் பாராட்டினர்.

## ஸ்ரீ சாரதாமணிதேவியார் ஜெயந்தி விழா

22-12-48 வெள்ளவத்தை ஸ்ரீராமக்கிருஷ்ணசங்க மண்டபத்திலும்
27-12-48 நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரி மண்டபத்திலும் அடக்கமாகவும் புனிதமாகவும் இவ்விழா கொண்டாடப்பட்டது.

திருக்கேதீஸ்வரத்தில் பாலாவித் தீர்த்தத் திறப்புப் புனித விழா வைபவம் 28-1-49 வெள்ளிக்கிழமை நடைபெறத் திருவருள் பாலித்திருக்கிறது. அன்பர்கள் ஒன்றுகூடி அருள்பெற வேண்டுகின்றோம்.

---

# ஆத்மஜோதியின் ஜீவியசந்தா ஆதரவாளர்கள்.

25 திரு. A. கதிரேசு நம்புக்பிட்டி, நாவலப்பிட்டி. [வட்டவளை.
26 திரு. P. M. முனிசாமி கெட்கங்காணி கடவளை எஸ்ரேற்,
27 திரு. K. இராசலிங்கம் M. P. நாவலப்பிட்டி. [ணாகம்.
28 திரு. ச. பொன்னுத்துரை சைவப்புலவர் ஏழாலை தெற்கு சுண்
29 திரு. P. முத்துலிங்கசுவாமி புகையிரதப்பகுதி கொழும்பு.
30 திரு T பொன்னம்பலம் ஓவசியர், நுவரெலியா. [வட்டவளை.
31 திரு. A. V சின்னையா கெட்கங்காணி, கரோலினா எஸ்ரேற்
32 திரு. ச. அருமைநாயகம் ஓடிற் ஒவ்வீஸ் கொழும்பு.
33 திரு. N R மயில்வாகனம் இலங்கை வங்கி மட்டக்களப்பு.

## விஷேடதானஞ் செய்வோர்க்கு ஓர் விண்ணப்பம்.

இதுவரையில் வெளிவந்த 'ஆத்ம ஜோதி' யின் இருசுடர்களிலிருந்து அதின் லட்சியமும் அதில் வெளியாகும் கட்டுரைகளின் எளிய நடையும் தெளிவான கருத்துக்களும் எல்லோர்க்கும் விளங்கியிருக்குமென நம்புகிறோம்.

சமயசாஸ்திர ஆராய்ச்சியும் தத்துவங்களின் விளக்கமும் எமது நோக்கமல்ல. சாஸ்திரங்கள், தத்துவங்கள் குறித்த நூல்களுக்குக் குறைவில்லை ஆகையால் இவற்றை வாழ்க்கைமூலம் தெளிவாக்கும் பெரியார்களின் அருள்வாக்குகளே கூடிய இடம் பெறும். விஷயதானஞ்செய்யவிரும்பும் அன்பர்கள் தயவுசெய்து இதைக்கருத்தில்வைத்து, காலதேவி வேண்டிநிற்கும் முறையில் தொண்டாற்ற முன்வருவார்களாக.—ஆசிரியர்.

## அன்பர்களுக்கு

ஆத்மஜோதி ஆதரவாளர் யாவருக்கும் எமது புதுவருட வாழ்த்து உரித்தாகுக சோதியின் 2-ம் சுடரைப்பார்த்த சில அன்பர்கள் தமக்கு 1-ம் சுடர் அனுப்பிவைக்கவில்லையே என்று கோபமாகக் கடிதம் எழுதியுள்ளார்கள். ஆசையுள்ளோர் தங்களுக் கறிந்த அன்பர்களிடம் இரவலாகப்பெற்று வாசித்துக்கொள்வார்களாக. நாங்கள் செய்த பிழைக்கு உங்களோடு சேர்ந்து மனஸ்தாபப்படுவதே தவிர வேறுசெய்வதற்கொன்றும் இல்லை.

சோதியின் சந்தாதாரர்கள் யாருக்காவது மாசந்தோறும் பிரதிகள் ஆங்கிலத்தேதி 25-க்குமுன் கிடைக்காவிடில் உடனே உரிய விலாசத்திற்கு எழுதுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்

விலாசம் மாறுதல்செய்வோர் ஆங்கிலத்தேதி 10-க்கு முன் அறியத்தந்தால்தான் அந்தமாசச் சுடர் அவர் கையில் கிடைக்கும். இல்லாவிடில் பழைய விலாசத்திற்கே அனுப்பப்படும்.

# யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

இயற்றியது.

1. நாவலர் பெருமான் 3—0

சிவத்திரு ஆறுமுக நாவலர் வரலாறு, எந்த உள்ளத்தையும் வீறுபடுத்தும் சக்தி வாய்ந்தது. நாவலர், "தமிழ், சைவம்" என்றே உயிர்த்தார் இப்பெரியார் வரலாறும் இரு மொழிகளும், அருட்பணித் திறனும் இந் நூலில் நன்கு விளங்கும்.

2. யோக சித்தி (மூலமும் உரையும்) 3—0

ஆசிரியர்-கல்வி, சுகாதாரம், அரசியல், சமுதாய சீர்திருத்தம், கிராம சேவை, பத்திரிகை, காவியம், யோகம் முதலிய பல துறைகளில் வாழ்ந்து பெற்ற அனுபவங்களெல்லாம் இந்நூலில் அடங்கியுள்ளன.

3. பாரத சக்தி மகா காவியம் (ஐந்து காண்டங்களும்) 15—0

இந்நூல் உலகப்பெரியார் வரலாறுகள் எல்லாச்சமய-சன்மார்க்க யோக மார்க்கங்களின் சாதனை முறைகள் சுத்தயோக சித்தி ரகசியங்கள். கலை, பொருளாதாரம், சமயம், அரசியல், தொழில், முதலிய எல்லாத் துறைகளிலும் மனிதன் பூரணம் பெற்று அதிமனிதனாக வாழும் வழிகள் அடங்கிய புதிய காவியச் சோலை 1000 பக்கங்கள்.

புதுயுக நிலையம்,—புதுச்சேரி.

இப் புஸ்தகங்களைக் குறிப்பிட்டுள்ள விலைக்கே யாழ்ப்பாணம் விவேகானந்தர் அச்சுக்கூடத்திலும் பெறலாம்.

---

# குங்குமம்

படிக்கப் படிக்க இனிக்கும் என்றும் புதுமையுடனிருக்கும் விஷயங்கள்!

கண்களுக்குக் காட்சி!! மூளைக்கு விருந்து!!!

1 வருட சந்தா ரூ. 6 2 வருடங்களுக்கு ரூ 11

ஆயுட் சந்தா ரூ. 100

'குங்குமம்' காரியாலயம்

'முரளி,' பச்சையப்பன் ஹாஸ்டல் ரோட்,

சேத்துப்பட்டு, மதராஸ் 10